


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங். ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் இன்று (17.12.2016) நடைபெற்ற அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினவிழாவில் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ஜெயராணி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.பிரம்மநாயகம், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.மதுசூதனன் உட்பட பலர் உள்ளனர்.

செ.வெ.எண்: 883/2016 நாள்: 17.12.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங். ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினவிழா 2016 நிகழ்ச்சி இன்று (17.12.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங். ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினவிழா 2016 நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் இன்று (17.12.2016) நடைபெற்றது.

மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு (ஓட்டப்பந்தயம், நீளம்தாண்டுதல், குண்டெறிதல்) போன்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப் பெற்ற 48 மாற்றுத்திறனாளிகளுக்கு முதல் பரிசும், 32 மாற்றுத்திறனாளிகளுக்கு இரண்டாம் பரிசும், 32 மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்றாம் பரிசுகளும் வழங்கப்பட உள்ளது. இதில் முதல் பரிசுப் பெற்ற 48 மாற்றுத்திறனாளிகளுக்கு இன்று நடைபெற்ற அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழா நிகழ்ச்சியில் நினைவு பரிசுகளும், பாராட்டுச் சான்றுகளும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங். ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

பின்னர் 16 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.5,360/- மதிப்பிலான சக்கர நாற்காலிகள், 25 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.4,380/- மதிப்பிலான காது கேட்கும் கருவிகள், 02 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.19,000/- மதிப்பிலான செயற்கை அவயம், 03 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.6,200/- மதிப்பிலான செயற்கை கால்கள், 02 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.9,480/- மதிப்பிலான ஒலிபெருக்கிகள், 20 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.250/- மதிப்பிலான ஒளிரும் மடக்கு ஊன்றுகோல்கள், மற்றும் 07 மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு பாதுகாவலர் சான்றுதல்கள் என மொத்தம் 75 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 2,75,660/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி தெரிவித்ததாவது:

தமிழக அரசு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக பல்வேறு திட்டங்களை அறிவித்து ஒவ்வொரு மாற்றுத்திறனாளிகளும் அதனை முழுமையாக பெற்று பயனடைய செய்ய வழிவகை செய்துள்ளார்கள். குறிப்பாக மாற்றுத்திறனாளிகளும் மற்ற மனிதர்களை போல இயல்பாக தங்களது அன்றாட பணிகளை மேற்கொள்ள போக்குவரத்தின் மூலம் இலவச பயண அட்டை, வாழ்வில் உயர்ந்த நிலை அடைய சிறந்த கல்வி, கல்வி உபாகரணங்கள், நலத்திட்ட உதவிகள் போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம் என்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு பாதுகாப்பு அரசாக தமிழக அரசு செயல்பட்டு வருகிறது. எனவே மாற்றுத்திறனாளிகள் தமிழக அரசு வழங்கும் அனைத்து நலத்திட்ட உதவிகளை பெற்று வாழ்வில் பயன் பெற வேண்டும். மேலும் மாற்றுத்திறனாளிகளை பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் அவர்களை சிறந்த நிலை அடைய ஊக்கப்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ஜெயராணி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.பிரம்மநாயகம், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.மதுசூதனன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) திரு.விநாயக சுப்பரமணியன், மரு.ஆறுமுகம் பிள்ளை, இயக்குநர் ரூக்கோடு திரு. நவமணி, சிறப்பு நிலை பல்நோக்கு மறுவாழ்வு உதவியாளர் திரு.ந.இரவிகுமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.